# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை** : திரு. **மகேசன் காசிராஜன்,** இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

**ஆணை எண்: 352 /பேரூ/2025**
**நாள் : 05.01.2026**

திரு. V. ரங்கநாதன்,
தக்கோலம்,
இராணிப்பேட்டை மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
தக்கோலம் முதல்நிலை பேரூராட்சி,
இராணிப்பேட்டை மாவட்டம். - எதிர் மனுதாரர்

இராணிப்பேட்டை மாவட்டம், தக்கோலம், 24, மூலத்தம்மன் கோயில் தெரு, என்ற முகவரியை சேர்ந்த திரு. வி. ரங்கநாதன் என்பவரது 18.08.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 20.08.2025 அன்று பெறப்பட்டு, 352/பேரூ/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

இராணிப்பேட்டை மாவட்டம், தக்கோலம், 24, மூலத்தம்மன் கோயில் தெரு என்ற முகவரியை சேர்ந்த திரு. வி. ரங்கநாதன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு தனது 18.08.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:

" தக்கோலம் பேரூராட்சி, 13,15, மூலத்தம்மன் கோயில் தெருவில், குடியிருப்பு பகுதியான, கிராம நத்தம் (பழைய சர்வே எண்.760/1) குடியிருக்க வீடு கட்டுவதற்கு ந.க. எண். 612/2010 நாள் 03.01.2011-ல் திரு. சந்திரசேகரன் S/o பலராமன் என்பவருக்கு செயல் அலுவலரால் அனுமதி வழங்கப்பட்டது. ஆனால், மேற்படி நபர் அதை வணிக நிறுவனமாக கல்யாண மண்டபம் என்ற பெயரில் நடத்தி சுற்றி குடியிருப்பவர்களுக்கும் கட்டிட அனுமதியை மீறி பொது மக்களுக்கு தொந்தரவு கொடுத்து வந்தார். அதற்காக அதை எதிர்த்து, சென்னை உயர்நீதிமன்றத்தில், வழக்கு தொடர்ந்து W.P.No. 32287/2018 28.01.2019-ல் மேற்படி நபர் நீதிமன்றத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரமுள்ள அலுவலர்களின் அனுமதி பெற்றே இனிமேல் செயல்படுவதாகவும் அதுவரை எந்த பயன்பாட்டிற்கும் உபயோகித்து தொந்தரவு கொடுக்க மாட்டேன் என்று

பிரமாணபத்திரம் தாக்கல் செய்துள்ளார். மேலும் மேற்படி நபர் தொடர்ந்து திருமணங்கள் நடத்தி வந்ததால், தக்கோலம் பேரூராட்சி செயல் அலுவலருக்கு, தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005ன்படி 01.07.2023-ல் தகவல் கோரியதற்கு, 18.08.2023-ல் சரிபார்க்காமல் திருமணங்கள் ஏதும் நடைபெறவில்லை என்று பொய்யான தகவல் அளித்துள்ளார். அதற்காக உயர்நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்ந்து வழக்கு எண். Cont.P.1968/2024 நிலுவையில் உள்ளது. அதற்கு பிறகும், தொடர்ந்து திருமண நிகழ்வுகள் நடந்து வந்ததால் மறுபடியும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005ன்படி தகவல் கோரியதில், தக்கோலம் பேரூராட்சி செயல் அலுவலர், ந.க. எண். 231/2024 நாள் 13.12.2024-ல் கடிதம் எண். மூ.மு.265/2022 நாள் 03.01.2023-ல் தரைதளம் (கட்டிடத்தின்) குடியிருப்பு கட்டிடம் பயன்பாடு மாற்றம் செய்து கூடும் இடமாக (Convention hall) பயன்படுத்திக்கொள்ள முன் தேதியிட்டு உத்தரவு வழங்கியுள்ளார் என தெரிகிறது. இதே அனுமதிக்கு பொருள் எண். 24, நாள் 2022 கட்டிடம் பயன்பாட்டினை குடியிருப்பு பகுதியை வணிகமாக மாற்றிக் கொள்வதற்கு (commercial) ஊரக நகரமைப்பு துறை, மாவட்ட நிர்வாகம் மற்றும் மாசு கட்டுப்பாட்டு துறை ஆகிய துறைகளின் அனுமதி பெறாமல் தக்கோலம் பேரூராட்சி தலைவர் தன்னிச்சையாக, பதவியை துஷ்பிரயோகம் செய்து மன்றத்தில் வைத்து செயல் அலுவலரை உத்தரவும் வழங்க ஆணையிட்டுள்ளார். இது முழுக்க முழுக்க தக்கோலம் பேரூராட்சி தலைவர் மற்றும் செயல் அலுவலர் ஆகியோரின் துஷ்பிரயோக செயலாகும். எனவே தாங்கள் இதை விசாரித்து தக்க நடவடிக்கை எடுத்து இருவருக்கும் தக்க தண்டனை வழங்க உத்தரவு வழங்குமாறு வேண்டுகிறேன்" என கேட்டுக்கொண்டுள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 23.10.2025 நாளிட்ட கடிதத்தின் மூலம் தக்கோலம் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3. தக்கோலம் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 05.11.2025 நாளிட்ட அறிக்கை ந.க. எண். 219/2025ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

தக்கோலம் பேரூராட்சி எண். 13,15 மூலத்தம்மன் கோயில் தெரு, பழைய சர்வே எண். 760/1, புதிய சர்வே எண்கள். 1317/8 மற்றும் 1317/9ல் உள்ள காலியிடத்தில் தளம் வீடு கட்டுவதற்கு திரு. ப. சந்திரசேகரன், த/பெ. பலராமன் என்பவரால் வரைபட அனுமதி கோரி மனு அளிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து இடத்தினை ஆய்வு செய்து பேரூராட்சி செயல்முறைகள் ந.க. எண். 612/2010/A2 நாள் 03.01.2011ன்படி தக்கோலம் பேரூராட்சி செயல் அலுவலரால் குடியிருப்பு பயன்பாடாக கட்டிட அனுமதி வழங்கப்பட்டது.

திருமண கட்டிட வரைபட அனுமதியின்றி திருமணக்கூடம் கட்டியுள்ளார் எனவும் இதனால் குடியிருப்பவர்களுக்கும் பொது தொந்தரவு கொடுத்து வந்தார் எனவும், திரு. வி. ரங்கநாதன் என்பவரால் அதை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. வழக்கு எண். W.P. No. 32287/2018, நாள் 28.01.2019 திரு. ப. சந்திரசேகரன் என்பவர் தளம் வீட்டிற்கு மட்டுமே அங்கீகாரம் பெறப்பட்டு அவ்விடத்தில் திருமண மண்டபத்திற்கோ அல்லது அடுக்குமாடி கட்டிடங்கள் கட்டுவதற்கோ உரிய கட்டிட அனுமதி பெறும் வரை கட்டுமானப் பணியினை நிறுத்திடவும், திருமண மண்டபத்திற்கு நகர் ஊரமைப்பு துறையிடம் உரிய அங்கீகாரம் பெற்றிடவும் அறிவுறுத்தப்பட்டது. மேலும் உரிய அங்கீகாரம் பெறாமல் கட்டுமானப் பணி நடைபெற்றால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என ந.க. எண். 5/2023, நாள் 14.02.2019ன்படி அறிவுறுத்தப்பட்டது.

மேலும் இவ்விடத்தில் திரு. ப. சந்திரசேகரன் என்பவர் வணிக கட்டிடம் பேரூராட்சியின் அனுமதியின்றி கட்டியுள்ளார். இந்த இடத்திற்கு வணிக பயன்பாட்டிற்கு உண்டான அங்கீகாரம்

மற்றும் வரி விதித்து அனுமதி வழங்குமாறும் மனு அளித்துள்ளார். இவை முறைப்படி நகர் ஊரமைப்பு துறை மூலமும் மற்றும் பேரூராட்சியின் செயல் அலுவலர் அல்லது மன்றத்தின் அனுமதி முறையான வழியில் பெற்ற பின்னரே இதற்கு வணிக பயன்பாட்டிற்கான அங்கீகாரம் வழங்க இயலும். மேலும் அவர் கொடுத்த மனு தளம் வீட்டிற்கு மட்டுமே பொருந்தும். வணிக பயன்பாட்டு கட்டிடத்திற்கு இந்த உரிமம் பொருந்தாது என திரு. ப. சந்திரசேகரன் என்பவருக்கு பேரூராட்சி அலுவலக கடித ந.க.எண். 5/2023, நாள் 28.03.2019ன்படி தகவல் தெரிவிக்கப்பட்டது.

மேலும் மூலத்தம்மன் கோயில் தெருவில் அமைந்துள்ள சர்வே எண்கள். 1317/8, 1317/9, 1320/16 மற்றும் 791/34ல் உள்ள மனையில் கான்கிரீட் தளம் கொண்ட கட்டிடம் கட்டுவதற்கு வரைபட நகல், பத்திரம் நகல், பட்டா நகல், மதிப்பீடு ஆகிய ஆவணங்கள் இணைத்து கட்டிட உரிமம் சான்று வழங்கும்படி 30.04.2025 அன்று திரு. ப. சந்திரசேகரன் என்பவரால் மனு அளிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து மேற்படி சர்வே எண்ணில் ஏற்கனவே பெற்ற குடியிருப்பு கட்டிட உரிமத்தினை ரத்து செய்து, வணிக பயன்பாட்டிற்கு அதிகாரமளிக்கப்பட்ட அதிகார வரம்பு 2000 சதுர அடிக்குள் புதியதாக வணிக பயன்பாட்டிற்கான கட்டிட உரிமம் பெற்று பயன்படுத்திக்கொள்ள தீர்மானம் எண்.75, நாள் 31.05.2022ன்படி அனுமதி வழங்கி தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை தொடர்ந்து பேரூராட்சி அலுவலக செயல்முறைகள் மூ.மு.எண். 265/2022, நாள் 03.01.2023, கட்டிட உரிமம் எண். 14/2022 – 2023ன்படி ஏற்கனவே கட்டியுள்ள கட்டிடத்தின் குடியிருப்பு கட்டிடம் பயன்பாடு மாற்றம் செய்து வணிக பயன்பாடு இடமாக பயன்படுத்தி கொள்ள மட்டும் உரிய நிபந்தனைகளுக்கு உட்பட்டு வரைபட அனுமதி வழங்கப்பட்டது.

மேலும் மேற்படி இடத்திற்கு வழங்கப்பட்ட கட்டிட உரிமத்திற்கு மாறாக கட்டிடத்தினை பயன்படுத்தி வருவதாக திரு. வி. ரங்கநாதன் என்பவரால் வாட்ஸ்அப் மூலம் புகார்கள் அளிக்கப்பட்டதை தொடர்ந்து திரு. பி. சந்திரசேகரன் என்பவருக்கு பேரூராட்சி அலுவலக கடித ந.க. எண். 120/2024, நாள் 24.05.2025ன்படி நேரில் வந்து புகாருக்கான விளக்கம் அளிக்க தெரிவிக்கப்பட்டது. ஆனால் திரு. பி. சந்திரசேகரன் என்பவரால் மருத்துவர் ஆலோசனையின் பேரில் மருத்துவ கவனிப்பில் இருப்பதாகவும், கால அவகாசம் கோரி 01.06.2025 அன்று பதிவு அஞ்சல் தபால் மூலம் கடிதம் அனுப்பி இருந்தார். நேரில் ஆஜராகாத பட்சத்தில் பேரூராட்சி அலுவலக கடித ந.க.எண். 120/2024, நாள் 25.06.2025ன்படி உடன் ஆஜராகி விளக்கம் அளிக்க மீண்டும் கடிதம் அளிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து திரு. பி. சந்திரசேகரன் என்பவரால் 01.07.2025 அன்று நேரில் ஆஜராகி திரு. வி. ரங்கநாதன் என்பவர் என் மீது உள்ள காழ்ப்புணர்ச்சி காரணமாக இந்த புகார்களை அளித்துள்ளதாக கடிதத்தின்படி தெரிவித்துள்ளார். மேலும் திரு. வி. ரங்கநாதன் என்பவரிடமிருந்து புகார்கள் மற்றும் புகைப்படங்கள் வாட்ஸ்அப் மூலம் அனுப்பியுள்ளதால் கட்டிட உரிமத்திற்கு மாறாக நிகழ்ச்சிகள் நடைபெற்றால் பேரூராட்சி அலுவலக கடித ந.க.எண். 120/2024, நாள் 07.07.2025ன்படி மேற்படி கட்டிடத்திற்கு வழங்கப்பட்ட கட்டிட உரிமத்தினை ரத்து செய்வதுடன், அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள கட்டிடத்தினை பூட்டி சீல் வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பேரூராட்சி அலுவலக கடித ந.க. எண். 120/2024, நாள் 07.07.2025ன்படி அறிவிப்பு வழங்கப்பட்டது.

மேலும் இக்கட்டிடத்திற்கு கட்டிட விதிகளின்படியும், செயல் அலுவலருக்கு வழங்கப்பட்ட 2000 சதுர அடி அளவிற்குள் 1990 சதுர அடி அளவிற்கு மட்டும் கட்டிட அனுமதி வழங்கப்பட்டது. இது குறித்து பேரூராட்சியின் செயல் அலுவலர் மற்றும் பேரூராட்சியின் மன்றத் தலைவர் மீது புகார் கூறியுள்ளது உண்மைக்கு புறம்பான புகாராகும் என்பதை பணிவுடன் இதன்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரரின் புகார் மனு, தக்கோலம் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை ஆகியன கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

இராணிப்பேட்டை மாவட்டம், தக்கோலம் முதல்நிலை பேரூராட்சிக்குட்பட்ட எண். 13, 15 மூலத்தம்மன் கோவில் தெரு, புல எண்கள் 1317/8 மற்றும் 1317/9ல் திரு. ப. சந்திரசேகரன் என்பவர் தக்கோலம் பேரூராட்சி செயல் அலுவலரின் செயல்முறைகள் ந.க. எண். 612/2010/A2 நாள் 03.01.2011ல் குடியிருப்பு பயன்பாடாக கட்டட அனுமதி பெற்ற நிலையில், கட்டட அனுமதிக்கு மாறாக திரு. ப. சந்திரசேகரன் என்பவரால் திருமணக்கூடம் கட்டியுள்ளதால் பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுவதாக மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில் (W.P.32287/2018) மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் 28.01.2019 நாளிட்ட தீர்ப்புரையில் திரு. சந்திரசேகரன் என்பவரால் மேற்படி கட்டடத்தை திருமண மண்டபமாக பயன்படுத்திட உரிய கட்டட அனுமதி கோரி சம்பந்தப்பட்ட அமைப்புகளில் விண்ணப்பம் செய்துள்ளதால், திருமண மண்டபமாக கட்டட அனுமதி பெறும் வரை மேற்படி கட்டடத்தை எவ்வித பயன்பாட்டிற்கும் வாடகைக்கு விடுவதில்லை என திரு. சந்திரசேகரன் எதிர்வாதுரை தாக்கல் செய்ததன் அடிப்படையாக மாண்பமை உயர் நீதிமன்றத்தால் இவ்வழக்கை இத்துடன் முடித்து வைத்து ஆணையிடப்பட்டது. மேற்காணும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற ஆணையினை மதிக்காமல் தொடர்ந்து திரு. சந்திரசேகரன் மேற்படி கட்டடத்தில் திருமணங்கள் நடத்தி வருவதாக திரு. V. ரங்கநாதன் என்பவரால் சென்னை உயர்நீதி மன்றத்தில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு (Contempt Petition No. 1968/2025) தொடரப்பட்டு அவ்வழக்கு நிலுவையில் உள்ளது என்பதை மனுதாரரின் புகார் மனு மற்றும் ஆவணம் மூலம் தெரிய வருகிறது.

மேற்காணும் சூழ்நிலையில் 2014ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10(3) (b)-ன்படி நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரிக்கலாகாது என கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது:

<u>Tamil Nadu Local Bodies Ombudsman Act, 2014</u>

Sec. 10(3) The Ombudsman shall not enquire into matters relating to:-

(a) xxxx
(b) any matter in respect of which an enquiry has been ordered under the Commission of Inquiries Act, 1952 or any matter pending before a Court;
(c) xxxx

இந்நிலையில் மனுதாரர் புகாராக தெரிவிக்கும் தக்கோலம் பேரூராட்சிக்குட்பட்ட 13, 15 மூலத்தம்மன் கோவில் தெருவில் திரு. சந்திரசேகரன் என்பவர் பேரூராட்சி கட்டட அனுமதிக்கு மாறாக திருமண மண்டபம் கட்டி பயன்படுத்தி வந்ததால், மனுதாரரால் மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கில் (W.P. No. 32287/2018) திரு. சந்திரசேகரன் என்பவர் திருமண மண்டபம் பயன்பாட்டிற்கு கட்டட அனுமதி கோரி சம்பந்தப்பட்ட அமைப்பிடம் அனுமதி விண்ணப்பம் சமர்ப்பித்து, அவ்வாறு உரிய ஆணை பெறும் வரையில் திருமணம் போன்ற நிகழ்ச்சிகள் நடத்தப்படாது என திரு. சந்திரசேகரன் என்பவரால் எதிர்வாதுரை தாக்கல் செய்ததன் அடிப்படையில் மாண்பமை உயர் நீதிமன்றம் வழக்கினை முடித்து வைத்த நிலையில், தொடர்ந்து திருமண நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது என நீதிமன்ற அவமதிப்பு வழக்கு (Contempt Petition No. 1968/2025) மனுதாரரால் தொடரப்பட்டு, அவ்வழக்கானது நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள நிலையில் 2014ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற சட்டப் பிரிவு 10(3)(b)ன்படி, இப்புகாரினை விசாரிக்க இயலாது என்பதால், இப்புகார் தொடர்பான

மேல் நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026-ஆம் ஆண்டு ஜனவரி 05-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. V. ரங்கநாதன்,
24. மூலத்தம்மன் கோயில் தெரு,
தக்கோலம் பேரூராட்சி – 631 151
இராணிப்பேட்டை மாவட்டம்.

2) செயல் அலுவலர்,
தக்கோலம் முதல்நிலை பேரூராட்சி,
இராணிப்பேட்டை மாவட்டம்.

3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

4) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
(பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

<u>நகல்</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

6/1/26
செயலாளர்
6/01/26

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம், சென்னை–600 032